**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT,**

**PUDUKKOTTAI**

**C.C. No: 96/2021**

**Deposition of Witnesses for PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.**குணசீலன்** | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

**04.03.2024**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அறந்தாங்கி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.03.2019ம் தேதி அறந்தாங்கி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் சிவக்குமார் அவர்கள், அறந்தாங்கி விஏஓ, கும்மங்காடு வட்டம் வந்து ரகசிய தகவல் சொன்னதன் பேரில், 6.20 மணிக்கு முத்துக்குமார் மற்றும் நான், விஏஓ மோகன், கிராம உதவியாளர் சரவணன் ஆகியோர் எம்.ஜி.ஆர் நகர் சென்றபோது, அங்கு கஞ்சா விற்பதாக விஏஓ அடையாளம் காண்ப்பித்தார். பின்னர் பெயர், விலாசம் தெரிந்த முருகன், வயது 62, த/பெ.சிவசாமி செட்டியார், எம்.ஜி.ஆர்.நகர், என்பவர் அவர் வீட்டின் கருவேளமரத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். எதிரியை விஏஓ அடையாளம் காண்பித்தார். உதவி ஆய்வாளர் எதிரியை பிடித்து உங்களை சோதனை செய்ய வேண்டும் நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியின் முன்போ அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டதற்கு தேவையில்லை நீங்களே சோதனை செய்யலாம் என்றுசொன்னதன் பேரில், அவர் பக்கத்தில் ஸ்கூட்டி வேகோ புளூ கலர் டி.என்.55 AT 7869 என்ற இருசக்கர வாகனத்தில் வெள்ளை நிற சாக்கு மூட்டை இருந்தது. அதனை பிரித்து பார்த்தபோது இலை, பூவுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்த்தபோது 5 கிகி கஞ்சா இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து தீயிட்டு பார்த்தபோது கஞ்சா வாடை வீசியது. பின்னர் அவரிடமிருந்து சாட்சிகள் முன்னிலையில் வாக்குமூலம் பெற்றோம். அவர் கஞ்சா விற்பதாக ஒப்புக்கொண்டார். பின்னர் சோதனைக்காக தலா 100 கிராம் வீதம் 2 பொட்டலங்கள் பகுப்பாய்விற்காக எடுத்து, சாம்பில் கஞ்சாவில் நான் மற்றும் முத்துக்குமார், எதிரியும் கையொப்பம் செய்தார். மீதமுள்ள 4.800 கிகி கஞ்சாவை எடுத்துக்கொண்டு வழக்கு பதிவு செய்தோம். பின்பு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 19.03.2019 ம் தேதி 8.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் மாதிரி கஞ்சா **சா.பொ.1,2** ஆகவும், மீதமுள்ள கஞ்சா **சா.பொ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

என்னிடம் காட்டப்படும் சா.பொ.1,2 போட்டோ பொட்டலத்தில் உள்ள 1வது கையெழுத்து விஏஓ கையெழுத்து என்றும், 2வது கையெழுத்து எஸ்.சரவணன் கிராம உதவியாளர் கையெழுத்து என்றால் சரிதான். போட்டோவில் என்னுடைய கையெழுத்து இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் வந்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. ரகசிய தகவல் வநதபோது ஆய்வாளர் அவருடைய அரசு நான்கு சக்கர வாகனத்தில் பணி நிமித்தமாக வெளியில் சென்றுவிட்டதால், காவல் நிலையத்தில் ஆய்வாளர் இல்லாதபோது காவல் உதவி ஆய்வாளர் அவர்களும், நாங்களும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அறந்தாங்கி காவல் நிலையத்திற்கு அரசால் ஒரு நான்கு சக்கர வாகனம் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நானோ, உதவி ஆய்வாளர், முத்துக்குமார் ஆகியோர் 3 இருசக்கர வாகனங்களில் சென்றோம். விஏஓ, அவரது உதவியாளரும் அவரவர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். காவல் நிலையத்திலிருந்து தராசு, தீப்பெட்டி, படிகல் வெள்ளை தாள், பேனா ஆகியவற்றை கொண்டு சென்றோம். வேறு எதையும் எடுத்து செல்லவில்லை. எதிரியின் வீட்டிற்கும், நீதிமன்றத்திற்கும் 2 கிமீ தூரம் இருக்கும். எதிரியின் வீடு தார்சு வீடு. நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் யாரால் எழுதப்பட்டது என்றும், எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விவரம் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. யாரால் எடை போடப்பட்டது, எத்தனை முறை எடை போடப்பட்டது, யாரால் தீயிடப்பட்டது என்றும் எத்தனை முறை தீயிடப்பட்டது என்றும் விவரம் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போதை பொருள் வழக்கில் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உதவி ஆய்வாளர் அல்லது ஆய்வாளர் மாதிரி வரைப்படம், பார்வை மகஜர் தயார் செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து வழக்கு சொத்துக்களுடன் புகைப்படம் எதுவும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் போட்டோக்கள் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது. எதிரியை கைது செய்யும்போது எதிரிக்கு கைது குறிப்பாணை எத்தனை கொடுத்தார்கள் என்றால் சரிதான். நேரம் சரியாக தெரியவில்லை. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தேதி கொரனா காலம் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதை தான் அவர் வாக்குமூலமாக பதிவுசெய்து கொண்டார் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு வந்து 8.45 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. மாதிரி பொட்டலங்களில் S1,P1 என குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் மாதிரி பொட்டலங்களில் குறியீடுகள் எதுவும் கொடுக்கவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி ரகசிய

தகவல் வரவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விஏஓவிடம் வழக்கு தோதிற்காக புகார் மனு பெறப்பட்டது என்றும் அதற்கு ஏற்றவாறு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரியிடமிருநது எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. சான்றுப்பொருளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.